திரு. இராம. அரங்கண்ணல் : பேரவைத் தலைவர் அவர்களே, பக்கிங் ஹாம் கால்வாயைச் சீர்திருத்தம் செய்வது என்பது சென்னை மாநிலத்தை மட்டும் பொறுத்த விஷயம் அல்ல. பக்கிங்ஹாம் கால்வாய் உற்பத்தியா வது ஆந்திரப் பிரதேசத்திலாகும். இங்கே, நம் மாநிலத்தில் எப்படி முன்னேற்ற வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றனவோ, அம்மாதிரி ஆந்திரப் பிரதேசத்திலும் இந்தக் கால்வாயை சீர்திருத்தி மேம்பாடு செய்வதற்கான வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றனவா ? இது குறித்து நம் மாநில அரசு ஆந்திர அரசுக்குக் கடிதம் ஏதாவது எழுதி யிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, அது பற்றிய விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை.

திரு. கொளத்தூர் கோதண்டம்: பேரவைத் தலைவர் அவர்களே, பக்கிங் ஹாம் கால்வாய் தென்னார்க்காடு மாவட்டம், செங்கல்பட்டு மாவட்டம் ஆகிய மாவட்டங்களின் வழியாகச் செல்கிறது. சென்ற புயலுக்கு முன்னால் பல படகுகள் அங்கிருந்து சரக்குகளைப் படகுகளில் ஏற்றிக்கொண்டு சென்னைக்கு வந்துகொண்டிருந்தன. கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக இந்தக் கால்வாயில் தூர் எடுக்காததால், ஆயிரத்திற்கு மேற்பட்ட படகுகள் போக்கு வரத்து நிறுத்தப்பட்டிருக்கின்றன. ஆகவே இந்தக் கால்வாயில் தூர் எடுத்து, மீண்டும் படகுப் போக்குவரத்தை ஏற்படுத்தும் திட்டத்தை அரசு மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, சுமார் 20 லட்சம் ரூபாய் செலவில் பக்கிங்ஹாம் கால்வாயின் தெற்கு, வடக்குப் பகுதிகளில் மேற்கொண்டும் தூர் எடுப்பதற்கான திட்டம் ஒன்று ஒப்புதலுக் காக இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

திரு. கே. விநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, பக்கிங்ஹாம் கால்வாய் ஒரு " இன்ட்டர் ஸ்டேட் கெனால் ". இது ஆந்திரப் பிரதேசத்தி லுள்ள மசூலிப்பட்டணத்திலிருந்து நமது மாநிலத்திலுள்ள வேதாரண் யம் வரை செல்கிறது. இந்தக் கால்வாயின் அபிவிருத்தி வேலைகளை நம் மாநிலத்தில் மட்டும் செய்தால் போதாது. மத்திய அரசின் உதவி யுடன் ஆந்திர மாநிலத்துடன் சேர்ந்து இதை அபிவிருத்தி செய்ய வேண்டும். இதை " நேவிகேஷன் கெனலாகச் " செய்ய ஒரு " காம்ப்ர ஹன்ஸிவ் ஸ்கீம்" போட்டு அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ள, மத்திய அரசாங்கத்திடம் உதவிகேட்க அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொண்டிருக் கிறதா ? இந்தக் கால்வாயில் படகுப் போக்குவரத்து சீராக நடைபெற அரசு முயற்சி எடுத்துக் கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, இப்படி ஒரு ஸ்கீம் ஏற்கனவே போட்டு இதற்கான முயற்சியை மேற்கொண்டிருக்கி றோம்.

மீனம்பாக்கம் விமான நிலையம்.

***123 வினா.—திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்திற்கு அறிஞர் அண்ணா விமான நிலையம் என்று பெயர் மாற்றும்படி மாநில அரசு மத்திய அரசுக்கு எழுதியுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன்பேரில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. கொளத்தூர் கோதண்டம் : பேரவைத் தலைவர் அவர்களே, மீனம்பாக்கம் விமான நிலையத்திற்குப் பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரை வைக்கவேண்டுமென்று, மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலுள்ள விமான நிலையங்களுக்கு எந்தத் தலைவர்களின் பெயரையும் வைக்கவில்லை. அந்த அந்த இடத்தின் பெயரால்தான் விமான நிலையங்கள் அழைக்கப்படுகின்றன. எந்த விமான நிலையத்திற்காவது தலைவர்களின் பெயரை வைப்பார்களேயானால், அதன்பிறகு இதுபற்றி யோசிக்கலாம் என்று சம்பந்தப்பட்ட மத்திய அமைச்சர் அவர்கள் நேரிலே பேசியபோது, என்னிடம் இந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்.

Stenographers of Madras Corporation

* 124 *Q*.—THIRU N. KASIRAMAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state the pay scales of the stenographers working in the Madras Corporation ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : சுருக்கெழுத்தாளர் சம்பள வீதம் பின்வருமாறு :—

பதவிப் பெயர். (1)	சம்பள வீதம். (2) ரூபாய்
1 மேயரின் சுருக்கெழுத்தாளர்	
2 மேயரின் நேர்முக எழுத்தர்	
3 பொறுப்பு அதிகாரியின் நேர்முக எழுத்தர்.	200—10—250—15—400
4 தலைமை நிருபர் மன்றப் பிரிவு	
5 நிருபர்கள் (ஆங்கிலம்) மன்றப் பிரிவு ..	
6 நிருபர்கள் (தமிழ்) மன்றப் பிரிவு	
7 பல்வேறு துறைகளில் 1—6—1960-க்கு முன்னர் வேலையில் எடுத்துக்கொள்ளப் பட்ட சுருக்கெழுத்து தட்டச்சர்.	100—5—160—10—200
8 பல்வேறு துறைகளில் 1—6—1960-க்கு பின்னர் வேலையில் எடுத்துக்கொள்ளப் பட்ட சுருக்கெழுத்துத் தட்டச்சர்.	100—5—150—8—190
9 மன்றப் பிரிவின் சுருக்கெழுத்து தட்டச்சர்.	100—5—150—8—190

திரு. நா. காசிராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொடுத்துள்ள பல்வேறு நிலைகளிலுள்ள சுருக்கெழுத்து தட்டச்சர்கள் ஆகியவர்களின் கார்ப்பொரேஷன் சம்பள விகிதங்களையும், நமது மாநில சர்க்காரிலே உள்ள சுருக்கெழுத்து தட்டச்சர்கள் ஆகியவர்களுடைய சம்பள விகிதங்களையும் பார்க்கும்போது, பாகுபாடு இருக்கிறது. அரசாங்கத்திலே வேலை செய்பவர்களுக்கு ரூ. 90—4—110—3—140 என்ற சம்பள விகிதம் இருக்கிறது. ஆனால் கார்ப்பொரேஷனில் உள்ளவர்களுக்கு சம்பள விகிதங்கள் உயர்ந்த அளவில் இருக்கின்றன. ஆகவே கார்ப்பொரேஷனில் எந்த அளவுக்கு இருக்கிறதோ அதற்குச் சமமாக அரசாங்கத்திலே இருக்கிறவர்களுக்கும் உயர்த்த அரசாங்கம் முன்வருமா ?